உ



★ திருமதி இராசம்மா குமாரசாமி
★ செல்வி கிருஷாந்தி குமாரசாமி
★ செல்வன் பிரணவன் குமாரசாமி
★ திரு. சிதம்பரம் கிருபாமூர்த்தி

இவர்களின்

# * நினைவுத் தொகுப்பு *

8 - 12 - 1996

உ

சிவமயம்

★ திருமதி இராசம்மா குமாரசாமி

★ செல்வி கிருஷாந்தி குமாரசாமி

★ செல்வன் பிரணவன் குமாரசாமி

★ திரு. சிதம்பரம் கிருபாமூர்த்தி

இவர்களின்

# ★ நினைவுத் தொகுப்பு ★

**8 - 12 - 1996**

உ



# திருமதி இராசம்மா குமாரசாமி

தோற்றம் :
24 – 07 – 1937

மறைவு :
07 – 09 – 1996

## திதி வெண்பா

தாதாண்டு சிங்கத்தின் தண்ணொளி குறையபர
ஓது தசமி ஒரு திதியில் – மாது
இராசம்மா எம்மனோர் ஏங்களம இங்கிரராம்
அராப்படை யகப்பட்ட நாள்.

உ



# செல்வி கிருஷாந்தி குமாரசாமி

தோற்றம் :
21 – 11 – 1977

மறைவு :
07 – 09 – 1996

## திதி வெண்பா

தாதாண்டு சிங்கத்தின் தண்ணொளி குறையபர
ஓது தசமி ஒரு திதியில் - காதையாம்
கிருஷாந்தி கிங்கிர கிராதரால் அந்தோ!
உருவும் இலா தொழிந்த நாள்.

உ



# செல்வன் பிரணவன் குமாரசாமி

தோற்றம் :
27 – 10 – 1979

மறைவு :
07 – 09 – 1996

## திதி வெண்பா

தாதாண்டு சிங்கத்தின் தண்ணொளி குறையபர
ஓது தசமி ஒரு திதியில் – பாதகரால்
செல்வன் பிரணவனும் செம்மேனி தனினின்று
நல்லுயிரை நீக்கினான் நாடு.



# திரு. சிதம்பரம் இருபாமூர்த்தி

தோற்றம் :
21 – 01 – 1958

மறைவு :
07 – 09 – 1996

## திதி வெண்பா

தாதாண்டு சிங்கத்தின் தண்ணொளி குறையபர
ஓது தசமி ஒரு திதியில் — நாதன்
கிருபாமூர்த்தியுமே இளைஞர் கதற
அருமையுயிர் விட்டானோ அன்று.

# திருமதி இராசம்மா குமாரசுவாமி

யாழ் நகரிலே கைதடி எனும் ஊரிலே குடியிருந்த திரு: பொ: சந்திரசேகரர் அவர்களுக்கும் அவரது அருமை மனைவி பொன்னம்மா விற்கும் மலேசியாவிலுள்ள ஜொகூர் எனும் பட்டினத்தில் இளையவ ளாகப் பிறந்தார் இராசம்மா. 1937 ஆம் ஆண்டு ஏழாம் மாதம் 24 ஆம் திகதி இச்செல்வக் குழந்தையை தம் கரத்தில் பெற்று ஆனந்தமடைந்தனர் பெற்றோர். இவர் சிறு குழந்தையாக இருந்த போதே 1940 ஆம் ஆண்டு மே மாதம் தனது தந்தையாரை இழக்க நேர்ந்தது. தந்தை இல்லாத துயருடன் அவர் அன்னை இலங் கைத் தீவை நோக்கி கடற்பிரயாணஞ் செய்துவந்து மீண்டும் கைதடி யில் வசிக்கலானார். தாயகம் வந்ததும் அயலிலே உள்ள யா/கைதடி முத்துக்குமாரசாமி பாடசாலையில் இவரைக் கல்வி கற்க அனுப் பினர். அங்கு சிலகாலம் கற்றபின் அவர் கைதடி C. M. S. பாட சாலையிலும் பின்னர் யா/இராமநாதன் கல்லூரியிலும் தமது கல்வி யைத் தொடர்ந்தார். ஆக்கமும் ஊக்கமும் கொண்ட செல்வி இராசம்மா 1953 இல் இராமநாதன் கல்லூரியை விட்டு இந்தியா பயணமானார். அங்கு கல்கத்தா பல்கலைக்கழகத்துடன் இணைக் கப்பட்ட கல்லூரிகளுள் ஒன்றான பெண்கள் கிறீஸ்தவ கலாசாலை யில் கற்கத் தொடங்கினார். இங்கு மேற்கு வங்காளத்திலே தனிக் கோவிலாக விளங்கும் காளி கோவிலுக்கு அருகாமையில் இவர் வசித்து வந்தார். இதனால் தெய்வபக்தி கொண்ட ஒரு பெண்ணாக உருவெடுத்தார். இங்கு இடைநிலை விசேட வகுப்பில் சித்தி பெற்று அங்கிருந்தும் கல்கத்தாவில் முதலாம் பிரிவு அரச பல்கலைக்கழக மான பிரசித்தி பெற்ற பிறெசிடென்ஸி கல்லூரியில் மேற்படிப் பைத் தொடர்ந்தார். இக்கல்லூரி பல்கலைக்கழகத்து வளாகத்தி லேயே அமைந்திருந்தது. இங்கு கல்வி கற்றோர் சிறந்த கல்விமான்கள் மத்தியில் நடமாடக்கூடிய நல்ல சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றோர் ஆகும். இதனால் செல்வி இராசம்மா சந்திரசேகரத்திற்கு நல்ல சூழ் நிலையில் கல்வி கற்கும் பாக்கியம் கிடைத்திருந்தது. 1956 ஆம்

ஆண்டில் இவர் பொருளியல் பாடநெறியில் விசேடத்துவ கற்கைப் பிரிவில் (ஆர்னேஸ்) B. A. பட்டதாரியாக வெளியேறினார். உயர்ந்த பண்பாடும், கல்வி மேம்பாடும், அறிவுத்திறனும் கொண்ட பெரியோர்கள் மத்தியில் வாழ்ந்த காரணத்தினால் இவர் கல்வியில் மட்டுமல்ல, பண்பாட்டிலும் ஒரு நிறைவையும் பூரணத்துவத்தையும் கிடைக்கப் பெற்றவராக விளங்கினார். பெரியோர்களது சகவாசம் இவரது சிந்தையையும், உள்ளத்தையும் நன்முறையில் பக்குவப்படுத்தியிருந்தது. கல்வியறிவிலும் கலாசாரப்பற்றிலும் மேம்பட்டவராக வெளியேறினார்.

இவர் தனது ஆசிரிய சேவையை மாத்தளையிலுள்ள பாக்கிய வித்தியாலயத்தில் ஆரம்பித்தார் (1958). அதன் பின் மூன்று மாதங்கள் கேகாலையிலுள்ள அர்ச். மேரீஸ் பாடசாலை இவரது சேவையை வேண்டி ஏற்றது. இதன் பின்னர் திரிகோணமலையிலுள்ள சண்முக வித்தியாலயத்தில் கற்பிக்கச் சென்றார்! இது கோணமலை காளி அம்மன் ஆலயத்திற்கருகாமையில் இருந்ததால் அவர் மீண்டும் காளி தரிசனம், பக்தி இவற்றுடன் சமூக சேவையையும் மேற்கொள்ள வாய்ப்பளித்தது. துறைமுகம் பார்வையிடச் செல்லும் கல்லூரி மாணவர், ஆசிரியர் கோஷ்டிகளுக்கெல்லாம் வரவேற்பாளராக இருந்து விருந்து வழங்கி வந்தார்.

1966 ஆம் ஆண்டில் யாழ் வட இந்து மகளிர் கலாசாலையில் கடமையேற்கச் சென்றார். இவர் இங்கு சேவையாற்றும்போதுதான் கொழும்பில் சுகாதார சேவையில் சிரேஷ்ட லிகிதராகக் கடமையாற்றிய திரு. இளையதம்பி குமாரசுவாமி அவர்கள் இவரது கரம் பற்றித் திருமணம் செய்ய உத்தேசம் கொண்டு சித்திரை மாதம் 5 ஆம் நாள் 1973 ஆண்டு மிகச் சிறப்பாகத் திருமணம் நிறைவேறியது. கணவனே கண்கண்ட தெய்வம் எனக் கருத்துக்கொண்டு திருமதி இராசம்மா குமாரசாமி தனது அன்புக்குரிய மாணவர்கள், ஆசிரியர், பெற்றோர், அயலவர் அனைவரையும் பிரிந்து கொழும்பு நகருக்கு வந்தார். கொழும்பில் விவேகானந்த வித்தியாலயத்தில் கடமையாற்றினார். இங்கு 85, பனிங்ஸ் பிளேஸ், வெள்ளவத்தையில் தனது இல்லற வாழ்வை இனிதே ஆரம்பித்தார். பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் சிறப்பை தேடிக் கொடுத்தார் இராசம்மா. இவரது இனிய இல்லறத்தின் பேறாக இறைவன் இவர்

களுக்கு 1975 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி (அர்ச். அன்னம்மா பிரசவ வைத்தியசாலையில்) ஒரு பெண் குழந்தையைக் கொடுத்தார். அப்பிள்ளைக்கு அவர்கள் பிரசாந்தி எனப் பெயரிட்டு அன்போடு வளர்த்தனர்.

1977ஆம் ஆண்டில் திருமதி குமாரசாமி மீண்டும் தனது பழைய பாடசாலையாகிய கைதடி C.M.S. மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் சென்றார். 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் நாள் கிருசாந்தி இவ்வுலகிற்கு அறிமுகமாக்கப்பட்டார். இவர்களது இரண்டாவது அன்பு உருவாக கிருசாந்தி மலர்ந்தாள்,

1978 இல் C. M .S. பாடசாலையும் முத்துக்குமாரசாமிப் பாடசாலையும் இணைக்கப்பட்டு யா/கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் ஆக்கப்பட்டது. திரு. குமாரசாமி அவர்கள் அப்போது யாழ். ஓய்வூதியத் திணைக்களத்தில் இலிகிதராகக் கடமையாற்றி வந்தார். இவர்கள் இரு பெண் குழந்தைகளையும் நன்றே வளர்த்து வருகையிலே ஒரு ஆண் செல்வத்தை வழங்க இறைவன் திருவுளம் கொண்டார். அவரது ஆசியால் 1979 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் நாள் ஓர் அழகிய ஆண்மகவு மலர்ந்தது. மிகவும் பக்தி மேலீட்டால் அக்குழந்தைக்கு பிரணவன் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். பிரணவன் தந்தையின் கரங்களையே தொட்டிலாகக் கொண்டு வளர்ந்தான். ஆனால் அவர்கள் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. 1984 ஆம் ஆண்டு தை மாதம் 15 ஆம் நாள் தைப் பொங்கலன்று குடும்ப விளக்காக விளங்கிய திரு. இளையதம்பி குமாரசாமி அவர்கள் சிவபதம் அடைந்தார்.

அவரின் கரங்களிலேயே இரவும் பகலும் குடியிருந்த பிரணவனுக்குத் தந்தையின் மறைவு மலாரடியை விளைவித்தது. ஆனால் அன்று முதல் திருமதி குமாரசாமி தாயும் தந்தையுமாகப் பிள்ளைகளை நற்கவனத்துடன் வளர்த்து வந்தார். பாடசாலைக் கடமைகள், வீட்டுச்சுமை இவற்றை மிகவும் கெட்டித்தனமாக நடத்தி வந்தார். தந்தையில்லாத வெற்றிடத்தை நிரப்ப எத்துணை பாடுபட்டிருப்பார்! பிள்ளைகள் அவர்மேல் சொல்லொணாத அன்பும், பாசமும் கொண்டிருந்தனர். அவர்கள் கல்விமேல் பெரும் அக்கறை காட்டி வந்தனர். அவர்கள் கண்களில் நீர் கோர்க்காத வண்ணம் அவர்களை மகிழ்வுடன் வளர்த்து வந்தார். இக்காலம் அவரது

பரிசோதனைக் க்ரலமாக விளங்கியது. அவரை உப அதிபர் பதவிக்கு நியமிப்பதற்காக அரச உத்தியோகத்தர் கழுகுக்கண்களோடு அவரது நடத்தை, பாடசாலைக் கட்டுக்கோப்பிற்கு அவர் எவ்வாறு துலங்கினார், அவர் திறமைகள் இவற்றையெல்லாம் புடம்போட்டு பரிசோதித்தார்கள். பலமாக கட்டப்பட்ட அடி அத்திவாரத்தைக் கொண்ட அவரது வாழ்க்கைச் சீரமைப்பு எவராலும் அவரில் குறை காண இடமளிக்கவில்லை. அதனால் 1986, 8 ஆம் மாதம் அவர் யா/முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்து உப அதிபர் பதவி வழங்கப் பட்டது. அன்று முதல் அவர் இறுதி மூச்சு 1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் நாள் இரவு 9 மணியளவில் பிரியும் வரை – அவர் கழுத்து, கயிற்றால் திருகி இழுத்து சுருக்கிட்டு மடியும் வரை அவர் யா/முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்து உப அதிபராக விளங்கினார்.

திருமதி குமாரசாமியின் சேவைக்காலம் 38 ஆண்டுகள் ஆகும். அதனால் வட மாகாணத்தில் மிகக்கூடிய சம்பளம் பெற்ற ஒன்பது ஆசிரியர்களில் இவரும் ஒருவராக விளங்கினார்.

ஆசிரியராய் மாணவருக்கு ஏற்ற முறையில் கல்வி கற்பித்து அவர்களது தேவையைப் பூர்த்தி செய்ததுபோலவே இல்லத்திலும் தமது மூன்று பிள்ளைகளுக்கும் அவரவர் விருப்பத்திற்கேற்ப, அவரிடம் அன்புடன் வினாவி வகைவகையான சாப்பாட்டையெல்லாம் உடனடியாகவே செய்து சுடச்சுடப் பரிமாறி, அத்தட்டுக்களை ஏந்திச் சென்று பிள்ளைகள் கையில் கொடுத்து அவர்கள் அதை இரசித்து உண்பதைக் கண்டு உள்ளத்தால் பூரிப்பும் பெருமிதமும் கொள்வார். பிள்ளைகளது சந்தோஷத்தில் அத்தகைய கவனம் எடுத்தார். அவர்கள் படித்து முடியும் வரை தான் விழித்திருந்து கவனித்தார்.

அவர் இறுதியாக அவரது சகோதரருக்கு எழுதிய கடிதத்தில் "மகனது O/L பரீட்சை ஆகஸ்ட் மாதம் நடக்கவுள்ளது. மகளது A/L பரீட்சை செப்டெம்பரில் முடிவடைந்ததும் செப்டெம்பர் பிற்பகுதியில் நாம் மூவரும் கொழும்பு வர இருக்கின்றோம்" என்று எழுதியிருந்தார். ஆனால் நடந்தது என்ன? மூவரும் உருக்குலைந்த அழுகிய நிலையில் பிணமாகக் கொழும்பு கொண்டுவரப்பட்டார்கள்! என்னே! அவர் ஆன்மா சாந்தியடைய நாம் பிரார்த்திப்போம்!

௨

# செல்வி கிருசாந்தி குமாரசுவாமி

திரு. இளையதம்பி குமாரசாமி அவர்களுக்கும் இராசம்மாவுக்கும் இரண்டாவது அன்புச் செல்வமாக கிருசாந்தி மலர்ந்தாள். செல்வச் சிறப்புடனே சீராட்டி பாராட்டி வளர்ந்தவள் பள்ளி செல்ல ஆரம்பித்தாள். தனது முதலாவது ஆண்டுப் படிப்பை யா/அர்ச். ஜோன் பொஸ்கொஸ்ஸில் ஆரம்பித்தாள். இரண்டாவது ஆண்டை யா/சுண்டிக்குளி மகளிர் கலாசாலையில் தொடங்கினாள். அன்று முதல் 7.9.1996ல் இறுதி மூச்சு விடும் வரை அக்கலாசாலை உயர்தர விஞ்ஞான மாணவியாக விளங்கினாள். பரீட்சை எழுதிய படி, கொல்லரக்கரின் கரங்களில் கசங்கிய மலராக மடிந்தாள்! வைத்திய கலாநிதியாக வேண்டுமென்ற ஆசையும் அழிந்தது.

கிருசாந்தி எவராலும் மறக்க முடியாத ஒரு பெண். என்றும் இனியவளாக விளங்கியவள். சக நண்பர்கள்பால் அன்பு கொண்டவள். தாய்ப்பற்று மிகுந்தவள். எத்தகைய பிரச்சனையையும் தானாக சிந்தித்து விடுவிப்பவள். அவளது ஒளி மிக்க பிரகாசமான கண்கள் வானத்து நட்சத்திரம் போல் விளங்கும். நல்ல பல்வரிசை அவளுக்கு. இதனால் சிறந்த புன்னகை தவழும் முகத்தைக் கொண்டிருப்பாள். பாடசாலையில் மிகவும் கண்ணியமாக நடந்து கொள்பவள். கடமையே கண்ணாகக் கொண்டவள். அவளுக்கு நாடகத்தில் நடிப்பதென்றால் தனி விருப்பம். நளன் தமயந்தி நாடகத்தில் பங்கெடுத்துத் தனது நடிப்புத்திறமையை நன்றே வெளிப்படுத்

தினாள். ஆர்வம் அவளை சுயமாகவே இரசித்து நடிக்க வைத்தது. அத்துடன் பாடசாலையில் நடைபெறும் கவியரங்குகளிலும் பங்கெடுத்தாள். கற்பனை வளம் மிக்கவள்.

அவள் மிகவும் ஹாஸ்யமாகப் பேசுவாள். அவளது ஹாஸ்ய துணுக்குகளை மறக்க முடியாமல் இருக்கிறது. ஒருநாள் சைக்கிள் மிதிபடாமலே உருண்டு போய்க் கொண்டிருந்தது. அப்போது ''சைக்கிள் மிதியாது அது எப்படி உருளுகிறது?'' என்று கேட்ட போது ''மாமா அது பிரேக் இல்லாத சைக்கிள். தானாகவே ஓடுகிறது'' என்று சொல்லி 'கொல்' என்று சிரித்தாள். அவள் குரல் கணீரென்று இருக்கும். வகுப்பில் பாடங்களில் முதல் புள்ளி வாங்கி பல பரிசுகளைத் தட்டிக்கொள்வாள். சந்தோஷமான வேளைகளில் தானாகவே பாடி மகிழ்வாள். எப்போதும் மிகவும் துப்புரவாகவும் ஒழுங்காகவும் தனது ஆடையை உடுத்திக்கொள்வாள். கிருசாந்திக்கு நல்ல சுவையான போஷாக்கான உணவு உட்கொள்ள விருப்பம். ஆனால் ஏனோ மிகவும் கம்மியாகவே சாப்பிடுவாள். அதிகம் உண்பதற்கு விருப்பமில்லை. அவளுக்கு வகை வகையாக சிகை அலங்காரம் செய்து மகிழ்பவர் அவள் மாமனார். அது அவள் முகத்திற்குத் தனி அழகைக் கொடுக்கும். பாடசாலை மாணவர்கள் அதை இரசித்துப் புகழ்ந்த வேளை மாமனாருக்கு இடித்துச் சொல்வாள். ''மாமா இன்று உங்கள் சிகை அலங்காரம் ஜோர்! எல்லோரும் கியூவில் வரப்போறார்கள். ஆயத்தமாக இருங்கள்'' என்று கண் சிமிட்டிச் சொல்லிவிட்டுச் சிட்டாய்ப் பறந்துவிடுவாள்! இப்போது சிட்டாகப் பறந்துவிட்டாளே! அவளது கலகலப்பை நாங்கள் எண்ணி எண்ணி அழுகின்றோம். பொன்மாலை தவழும் கழுத்தில் கயிற்றுமாலை அவள் உயிரைக் குடித்தது. ஐயகோ என் செய்வோம்!

உன் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

# செல்வன் பிரணவன் குமாரசுவாமி

திரு. இளையதம்பி குமாரசாமிக்கும் இராசம்மாவிற்கும் தவப் புதல்வனாசப் பிரணவன் பிறந்தான். அன்பு அப்பாவின் கரங் களிலே வளர்ந்தான். மூக்கும் முளியுமாக புன்னகை தவழ் முகங் கொண்ட பிரணவனுக்கு இளம் வயதிலேயே துயர் வந்தடைந்தது: தந்தையின் மரணம் எவராலும் ஈடு கொடுக்க முடியாத தவிப் பைக் குழந்தை உள்ளத்திற்குக் கொடுத்தது. இதனால் அவன் தானாக இயங்கும் ஒரு சக்தியை சிறு வயதிலேயே உருவாக்கிக் கொண்டான். 1 ஆம் ஆண்டு முதல் 3 ஆம் ஆண்டுவரை குழந்தை பிரணவன் கைதடி விக்னேஸ்வராக் கல்லூரியில் படித்தான். அன்னையும் தந்தையுமாசத் தாய் இருந்தபோதிலும் அவனுக்கு ஒரு தனிமை உணர்வு இருந்தது. இது அவனை வேறு விதத்தில் ஒரு விவேகத்தன்மையையடைய வைத்தது. அதி புத்திகூர்மையுடைய வனாகத் திகழ்ந்தான். தானாக உருவாக்கப்பட்ட ஜீவியானான். ஆழ்ந்த சிந்தனை, துரித செயற்பாடு, பிரித்தறியும் திறன் மிக்கவ வானான். 4 ஆம் 5 ஆம் ஆண்டுகளை பொஸ்கொஸ்ஸில் சுற்றுப் புலமைப்பரிசில் பெற்று யா/பரி. யோவான் கல்லூரியில் கற்கத் தொடங்கினான். திறமையால் பல பரிசுகளைப் பெற்றான். கிரிக்கெட் விளையாட்டில் விருப்பம். கடமையில் கண்ணும் கருத்து மாக இருப்பவன். எவரையும் மனம் கோண வைக்க விரும்பாத ஒரு வெள்ளை உள்ளம். எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டு மென்ற மனப்பாங்குடையவன்.

ஆசிரியர்களுக்கு இவன்மேல் அலாதி பிரியம். குளப்படி செய்து தண்டனை பெற்று வகுப்பிற்கு வெளியே அனுப்பினாலும் ஆசிரியர் கள் அவனை மறுகணமே மன்னித்து வகுப்பிற் சேர்த்துக்கொள்வர். காரணம் அவன் வகுப்பை தவறவிடக்கூடாது என்பதாகும். பெரி யோரை மதிக்கும் பண்புடையவன். வகுப்பில் வினாவிற்கு விடை கூறுவதில் போட்டியிட்டு முந்துவான்.

பிராணிகளிடம் சிறப்பாக நாய், பூனைகளிடத்து பெருவிருப் புடையவன். எல்லாவற்றிற்கும் மேலாகத் தனது துவிச்சக்கரவண்டி

மேல் பெரு விருப்பங்கொண்டு பக்குவமாகப் பாதுகாத்து வந்தவன். பிரணவன் ஒரு இசைப்பிரியன். நல்ல உடற்கட்டு கொண்டவன். வயதிற்கு மேலான வளர்த்தியும், பலமும், சுறுசுறுப்பும், சக்தியும் கொண்டவன். தான் ஒரு பொறியியலாளராக வரவேண்டுமென்று கூறிக்கொள்வான். செய்ய முடியாத ஒரு காரியத்தைத் துருவித் துருவி ஏதோ ஒரு விதத்தில் செய்து வெற்றி காண்பான். எவ்வாறு இதைச்செய்தாய் என்று வினவினால் 'அதுதானடா பிரணவப் பொருள்' என்று ஹாசியமாகக் கூறி ரசிப்பான். இனிப்புப்பண்டங்களில் அலாதி பிரியம். ஒவ்வொவேளைகளில் லக்ஸ்பிரே, ஒவல்ரின், சீனி இவற்றைக் கலந்து மிகவும் இரசித்து இரசித்துச் சுவைப்பான்.

பிரணவன் தனது பெயரில் பெருமை கொண்டவன். தனது குடும்ப குல தெய்வத்தின் பெயர் தனக்கு இருப்பதையிட்டு ஒரு தனித்துவமான கௌரவம் அவனுக்கு. காலை, மாலை விநாயகர் வழிபாடு செய்வான். வழிபாட்டின் பின்னரே எக்கருமத்தையும் தொடங்குவான். இல்லத்தில் எல்லா விரத நாட்களும் வெகு விமரிசையாகவே கொண்டாடப்படும். அந்த அந்த தெய்வத்திற்குரிய சம்பிரதாய முறைப்படி வழிபாடு, நைவேத்தியம் முதலாயின நடைபெறும். பெற்றோரது வழிநடத்தலில் பிள்ளைகள் விரத அனுட்டானங்களையும் பழக்கவழக்கங்களையும் நன்றே அறிந்திருந்தனர். பிரணவனுக்கும் பிள்ளையார்மீது தனி அன்பு இருந்தது. ஔவைப் பாட்டியைத் தூக்கி கைலாயத்தில் வைத்ததுபோல இவனையும், பிள்ளையார், மடிப்பிச்சை கேட்டுப் பிள்ளையார் வழிபாடு ஆற்றிய எந்த மனையாளுக்கும் பிரசாதமாக இப்போது வழங்கியுள்ளாரோ யார் அறிவார்? பிரணவன் இல்லாது தாயும் தாங்கியிருக்க மாட்டாள். தாயை இழந்து பிரணவனும் இருக்க முடியாது. இதனால்தானோ இருவரும் ஒரே நாளில் மறைந்தனர்!

தாய்மீது அளவுகடந்த பாசம் மிக்கவன். ''அம்மாவானை, அதைச் செய்யாதே'' என்று ஆணையிட்டால், கடைசிவரை அக்கருமத்தைச் செய்யமாட்டான். அவ்வளவு தாய்மீது பாசமுற்றவன், அதனால்தானோ அம்மாவுக்கு ஏதும் ஆபத்து வந்துவிடுமே என்று ரியூஷன் வகுப்பு முடிந்து வீடுவந்து நடந்த செய்தி கேட்டதும் சிங்கக் குகைக்குள் அஞ்சாது இந்த ஆட்டுக்கிடாய் போனதுவோ? வீட்டுக்கு, குடும்பத்திற்கு ஒரு தலைவனாக வரவேண்டியவன், பலிக்கிடாயாகத் தானே போய் சிக்கி சிங்கத்தின் சீறிய கரங்களில் மடிந்தான்!

ஒரு மலை சரிந்தது! ஒரு குடும்பம் அழிந்தது! தம்பி! எம் கண்ணாளா! உனது ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கிறோம்.

# திரு. சிதம்பரம் இருபாமூர்த்தி

சிற்றூழியர், தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், கைதடி

கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவான் ஒரு சேவகன் போல் கிருபாமூர்த்தி! அன்பும், பணிவும் கொண்டவன். ஒருபோதும் ஒரு வேலையைச் செய்ய சளைக்கமாட்டான். சொல்லும் வேலையை நேர்மையுடனும், கடமையுணர்வுடனும் ஆற்றுபவன். சொல்லா வேலையைத் தானே உணர்ந்து செய்து முடிப்பான். எமது வீட டிற்கு வந்த நாள்முதல் நாலு வீட்டுப்பிள்ளையாய் கடமையாற் றியவன், நாலு வீடும் தன் வீடுபோல் கூசாது தனது மனமுவந்து கருமமாற்றுபவன். கிருபாமூர்த்தி என்றால் "அம்மா! ஐயா;" என்றுதான் குரல் கொடுப்பான். எமது குடும்பத்தில் நேர்ந்த எந்த இடரிலும் இடைநின்று பங்குகொள்பவன். சிறந்த தியாக உணர்வு படைத்தவன். தனக்கென வாழாது பிறருக்கு உரித்தாக வாழ்ந் தவன். எதைக் கொடுத்தாலும் முதலில் வேண்டாம் என்றுதான் பணிவன்புடன் மறுப்பான். பெரும் பிரயத்தனத்தால் தான் ஏற் பான். கள்ளம் கபடம் அறியாத உள்ளம் படைத்தவன். தனக்குத் துயர் நேரிட்டபோதும் மற்றவர்களைக் கவனித்துக் கொள்பவன். பிறர் கண்ணீர் துடைக்கும் பெருந்தன்மை கொண்டவன்.

பிறந்த நாடு விட்டுத் தென்பகுதிக்கு இடம் பெயருகையில் கிளாலிப் பாதையில் நீ கடைசியாக எமக்குச் சொன்னது "ஐயா, அம்மா! தம்பி! இந்தக் கிருபாமூர்த்தியை மறந்துவிட வேண்டாம்!" என்பதாகும். அதுவே உனது கடைசி வார்த்தை. அது எம் காது களில் ஒலித்துக்கொண்டிருக்கிறது! உன் நேர்மைத்தனத்தை அறிந்து தானே நாம் முதற்சபையில் உனக்கு முதல் இடம் கொடுத்துப் பழகினோம்! நீ எம்முடன் பழகியது உடன்பிறப்புப் போலல்லவா? இது முற்பிறப்புத் தொடரோ? முக்கண்ணனுக்குத்தான் விளங்கும்! அந்தப் பாசந்தான் அன்று அம்மா பிள்ளையைத் தேட வெளிக்கிட தனி வழி போக வேண்டாம் என்று உடன் சென்றாய்! என்ன நடந்தது? இவ்வுலகில் எமக்கு ஒரு வலது கரம்போல் துணை நின்

றாய். அம்மா, பிள்ளை தனிவழி போவதோ என்றோ அவருடன் அவ்வுலகமும் சென்றுவிட்டாய்!

இவ்வுலகிற் செய்த பணி போதாதென்றோ அவ்வுலகிலும் துணை நிற்கச் சென்றுவிட்டாய்? நீ என்ன குற்றம் செய்ததற்காக அவ் அரக்கர் உன் உயிர் குடித்தனர்? நீ எமக்குக் காட்டிய அன்புக்கும் செய்த சேவைக்கும் நாம் என்ன பிரதியுபகாரம் செய்ய முடியும்? அப்பனே கிருபாமூர்த்தி, நீ மறுபிறவியிலும் எம்மோடு ஒருவனாய் வந்து பிறக்க வேண்டும். நீ எமக்காக உயிர் துறந்தாய். உனை நம்பி வந்த உன் மனைவி வாடுகிறாள். நாம் எமது கண்ணீர்ப் பூவால் உனது இறுதிக்கிரியைகளை எமது கைகளாலேயே ஆற்று கின்றோம். இதுவன்றி நாம் என்ன செய்ய முடியும்? உன்னை மற வாது இருக்கச் சொன்னாய். எப்படி முடியும் உனை மறப்பதற்கு? நீதான் சேவைக்கு ஒரு இலக்கணமாகத் திகழ்ந்துவிட்டாயே! உனது அர்ப்பணிப்பை ஒரு காவியமாக்கிவிட்டாயே! உன் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். ஊர்காவற்பகுதியினரது கூற்றின்படி 7 ஆம் திகதி செப் டம்பர் மாதம் 1996 ஆம் ஆண்டு செம்மணி காவல் நிலையத்தில் சுருக்கிட்டு கொலை செய்யப்பட்ட

திருமதி இராசம்மா குமாரசாமி
செல்வி கிரிசாந்தி குமாரசாமி
செல்வன் பிரணவன் குமாரசாமி
திரு. சிதம்பரம் கிருபாமூர்த்தி

இவர்களது ஆன்ம சாந்திக்காக நாம் பிரார்த்திப்போமாக!

அன்பு உள்ளங்களே! இனி எப்போது உம்மைக் காண்போம்?
தாய்மையின் அன்பும், குழந்தை எக்களிப்பும்
சேவையின் உன்னதமும் எம்முள்ளத்தை உருக்குகிறது.
ஓ! நீதியே! நீ இருக்கின்றாயா? இருந்தால்
வானம் ஒலிக்காதோ! பூமி பிளக்காதோ?

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

# காரிய சித்தி மாலை

திருவாக்கும் செய்கருமம் கைக்கூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

1. பந்தம் அகற்றும் அநந்த குணப்
   பரப்பும் எவன்பால் உதிக்குமே
எந்த உலகும் எவனிடத்தில்
   ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள்
   அனைத்தும் எவன்பால்தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
   அன்பு கூரத் தொழுகின்றோம்.

2. உலகம் முழுதும் நீக்கமற
   ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
   உறாத மேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
   ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
   உவந்து சரணம் அடைகின்றோம்.

3. இடர்கள் முழுவதும் எவனருளால்
   எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
   சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
   கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
   சரணம் சரணம் அடைகின்றோம்.

4. மூர்த்தி யாகித் தலமாகி
   முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
   திறத்தினாலும் உயிர்க்கு நலம்

ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

5. செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுவிப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடனம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

7. மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

8. பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன் யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

தேவராய சுவாமிகள்

அருளிய

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் — கதித்(து)ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீராநமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச்சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இரு தொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலிமுழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரம்மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணுகை காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என் இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை த்னையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்

மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனம்மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன் ஒரு நினைவது ஆகி
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்ட திக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்து அடி
அறிந்து எனதுள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த

குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடனம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரணம் பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

★

# கண்ணீர் அஞ்சலி

45 நாட்கள் நம்பியிருந்த எம்மை ஆற்றாத்துயரில் ஆழ்த்திவிட்டு 07-09-96 இல் விண்ணுலகம் சென்ற எம்மருமை ஆசிரியை

★ **இராசம்மா குமாரசுவாமி அவர்கட்கும்**

★ **அவரது செல்வப் புதல்வி குமாரசுவாமி கிருஷாந்தி அவர்கட்கும்**

★ **அவரது அருமை மைந்தன் குமாரசுவாமி பிரணவன் அவர்கட்கும்**

★ **அயலவர் கிருபாமூர்த்தி அவர்கட்கும்**

**இதயம் கனிந்த எமது கண்ணீர்க் காணிக்கை**

இருளில் ஒளியாயும் ஏற்றத்தில் ஏணியாயும்
வாழ்க்கைக்கு வழிகாட்டியாயும் அன்பின் சிகரமாயும்
பண்பின் உறைவிடமாயும் பாசத்தின் ஒளி விளக்காயும்
வாழ்ந்து காட்டி, எண்ணாத நேரத்தில்
எம்மை விட்டு பிரிந்து மீளா துயில் கொண்ட
எங்கள் அன்பு ஆசிரியையே!
ஆலமரம் சாய்ந்ததுபோல் சாய்ந்து விட்டீர்கள்
துடிக்கின்றோம் நாம் இங்கு.

உங்கள் நீங்கா நினைவுடன் சித்தம் கலங்கியே நிற்கையிலும் உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உங்களால் வளர்த்து எடுக்கப்பட்ட
பழைய மாணவிகள்

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி இராசம்மா குமாரசாமி

எமது பாடசாலை உப அதிபராகக் கடமையாற்றிய திருமதி இராசம்மா குமாரசாமி அவர்களதும், அவர்களது மகள் கிருஷாந்தி, மகன் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரின் அகால மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

அன்னார்களது ஆத்மாக்கள் சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி
மகா வித்தியாலயம், கைதடி.
23 – 10 – 96

## கண்ணீர் அஞ்சலி

முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய உப அதிபரான

### திருமதி இராசம்மா குமாரசாமி

அவர்களினதும், அவரது மகள்

**கிருஷாந்தி**

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி A/L 96 மாணவி)

மகன் **பிரணவன்**

(பரியோவான் கல்லூரி A/L 97 மாணவன்)

அயலவர் **கிருபாமூர்த்தி**

(காரியாலய உதவியாளர் தெ.மே.ப.நோ.கூ. சங்கம், கைதடி)

ஆகியோரின் அகால மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னார்களது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தினரும்,
குமரன் விளையாட்டுக் கழகத்தினரும்

கைதடி மேற்கு.
கைதடி.

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு : 21 – 10 – 1977 | உதிர்வு : 7-9–1996

## செல்வி கிருஷாந்தி குமாரசாமி

(சுண்டிக்குளி A/L 96)

ஓ... உதிர்வினிலே உருவெடுத்த
வெண்புறாவே...
எங்கே நீ சென்றாய் ?
மரணவாசல் ஏறி இறைபாதம்...
சென்றுவிட்டாயா? அக்கா!

இவரது தாயார் : இராசம்மா குமாரசாமி
சகோதரர் : பிரணவன் குமாரசாமி
அயலவர் : கிருபாமூர்த்தி

இவர்களுக்கும் எங்கள் கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
கண்டிக்குளி மகளிர் கல்லூரி
ஆண்டு 6 A மாணவிகள்

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி இராசம்மா குமாரசாமி

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி. இல் கடந்த பல ஆண்டுகளாக ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமை யாற்றிய திருமதி இராசம்மா குமாரசாமி அவர்களது அகால மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் மகத்தான ஆசிரியச்சேவை, கல்விக் கருவூல நுழைபுலம், பாடறிந் தொழுகு பண்பு, கடமையில் கண்ணியம் ஆகியன எம் நெஞ்சை நெகிழ்க்கின்றன. இவரோடு அகால மரணம் எய்திய இவரது மகள் செல்வி கிருஷாந்தி, மகன் பிரணவன், அயலவர் திரு. சி. கிருபாமூர்த்தி ஆகியோருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபையினர்
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயம்,
கைதடி.

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி கிருஷாந்தி குமாரசாமி

எமது கல்லூரி உயர்தர வகுப்பு (விஞ்ஞான பிரிவு) மாணவி செல்வி கிருஷாந்தி குமாரசாமியினதும், அவரது தாயார் திருமதி இராசம்மா குமாரசாமி, சகோதரன் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரினதும் அகால மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

அன்னாரின் சகோதரிக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னார்களது ஆத்மாக்கள் சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.
மாணவர்கள்.

யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
24-10-96

---

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி கிருஷாந்தி குமாரசாமி

மலர்வு : 21 – 10 – 1977 உதிர்வு : ? ? ?

தற்காலிக பிரிவைக் கூட
விரும்பாமல் தவித்தோம் — இன்று
உன் முற்றான பிரிவை மட்டும்
எப்படித் தாங்கிக் கொள்வோம்?

உன்னுடன் அகால மரணமடைந்த
உன்னுடையவர்களின் நினைவுகளில்
எம் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

உயர்தர வகுப்பு மாணவிகள்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

# கண்ணீர் அஞ்சலி



## பிரணவனே காண்போமா...?

நீ வருவாய் என்றெல்லாம்
நிம்மதியாய் நாமிருந்தோம் — பின்
தாய் சோதரி தன்னுடனே
சாவிலிணைந்தாய் — என்றறிந்தோம்
பூவுதிர்ந்தது போல் உதிர்ந்தாய்
புன்னகையை நாமிழந்தோம் — இனி
பாரினிலே நின்னுருவம்
பிரணவனே காண்போமா...?
கல்லூரி தன்னில் ஒன்றாய்
கற்றவனே எம் தோழா
பரியோவான் பெற்றெடுத்த
பண்பான தவப்புதல்வா
விரைவாக எம்மை நீ
விட்டுமேன் சென்றாய் — இது
விதியென்று எண்ணியாம்...
புவிதனிலே தேறுவதா...?

— அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

பரி.யோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

*07–09–1996 இல் எம்மைப் பிரிந்து.*
*22–10–1996 இல் மண்ணைப் பிரிந்த.*
எம்மருமை நண்பனும்
**கைதடி விம்பிள்டன் விளையாட்டுக் கழக**
உறுப்பினருமான,

★ **அமரர் குமாரசுவாமி பிரணவன் அவர்களுக்கும்**

*அவரது தாயார்*
★ **இராசம்மா குமாரசுவாமி அவர்களுக்கும்**

*அவரது சகோதரி*
★ **கிருஷாந்தி குமாரசுவாமி அவர்களுக்கும்**

*அயலவர்*
★ **கிருபாமூர்த்தி அவர்களுக்கும்**

எம் இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலிகளை
காணிக்கையர்க்குகின்றோம்.

*அன்பின் உருவமே*
*ஆருயிர் நண்பனே*
*மாணவ உலகின் மணிவிளக்காய்*
*பாசமொ டெம்மைப் பற்றிய நண்பனாய்*
*கைதை ஊரிலே திகழ்ந்த செல்வனே*
*கல்வி நெறியில் நீ காட்டிய வன்மையும்*
*சொல்லித் திரிய சொப்பனம் ஆகா*
*எம்முடன் இருந்து நீ கல்வி பயின்றிட*
*காலன் தனக்குப் பொறுத்திட வில்லையோ*
*''விம்பிள்டன்'' வீரனாய் இருந்த உமது*
*சாந்தி வேண்டி சமர்ப்பணம் செய்கின்றோம்.*

நண்பர்கள்
கைதடி + கொழும்பு

''பேபி ரீச்சர்'' என்று எம்மெல்லோராலும் அன்பாக அழைக்கப் படும் எமது உபஅதிபர் திருமதி இ. குமாரசாமி இன்று எம்மிடையே இல்லை. அவர் மறைவை எம்மாற் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இன்னும் சில மாதங்களில் தனது அறுபது அகவையைப் பூர்த்திசெய்து பிரியாவிடை காண இருந்த உங்களைச் சேவை நலம் பாராட்டிக் கௌரவிக்க இருந்த நாங்கள் உங்கள் இறுதியூர்வலத்தைக்கூடக் காண முடியாத பாவிகளாகிவிட்டார்களே அம்மா. நீங்கள் எங்கள் ஒவ்வொருவரையும் உங்கள் அன்புக் குழந்தைகளாகவே நடத்தினீர்கள்; தாய் தன் பிள்ளைகளிடத்தில் எவ்வாறு அன்பு காட்டுவார்களோ அதுபோல் எம்மை அரவணைத்து கனிவான வார்த்தைகளால் கண்டித்து எங்கள் உயர்வே பெரிதென எண்ணி வழிகாட்டினீர்களே உங்களுக்கா இக்கொடுமை நேர்ந்தது. எம்மால் எண்ணிப்பார்க்க முடியவில்லையே.

அன்பின் திருவுருவே அடக்கத்தின் சிகரமே பண்பின் பிறப்பிடமே வன்சொல் பேசாத உங்களுக்கும் உங்கள் செல்வக் குழந்தைகளுக்குமா இக்கதி நேர்ந்தது. உங்களதும் உங்கள் பிள்ளைகளதும் பிரிவால் வாடும் செல்வி கு. பிரசாந்திக்கும், குடும்பத்தாருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள். உங்கள் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பழைய மாணவர்கள்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

# என்றும் என் முன் நிற்கும் சித்தியே!

என் இனிய சித்தி! நீ போய்விட்டாய்! உனக்கு
உன் புவனேஸ் அழுவது தெரியுமோ தெரியாதோ?
காலை பள்ளிக்கும் போகும் போது என்னை அழைத்துப்போவாய்
மாலை எனைக்கூட்டி வீடு வருவாய்! நாம்
எத்தனை பிரச்சனைகள், புதிர்கள், கதைகள் பேசுவோம்!
எத்தனை ஆங்கிலப் புலவர்கள் எமது கதையில் கலந்தனர்!
இன்று நான் தனியநானேன்! நடந்தது தெரியுமா?
அன்று உங்களைக் காணவில்லை என்ற போது மணி ஆறு,
ஊரடங்கு வேளை – இரவிரவாய் பதைபதைத்தேன்!
விடியச் சூரியன் புதிய உருவாய் வெளிவந்தான்!
கடமைக்குப் பயப்படாது காவலரன் அணுகினேன் நான்!
இங்கும் அங்குமாக தேடி அலைந்தேன் களைத்தேனா
சித்தி! உன் உடன் பிறந்தார் தலைகாட்டு முன்னரே நான்
பத்திரமாய் கருமமாற்ற முற்பட்டேன்! வென்றேனா?
நீங்கள் எனக்கு உற்ற நண்பராய் ஆலோசகராய் இருந்தீர்
நாங்கள் எமது கடமையைச் செய்யவேண்டுமல்லவா?
நால்வர் காணாது போயினர் என்றறிந்ததும் நான்
நாடாத இடமில்லை. சோதிடர் இல்லை. நீங்கள்
தப்பாது வீடு வந்துவிடுவீர்கள் என்றிருந்தேன்.
அப்போது 46 ஆம் நாள் நாம் கேட்ட செய்தி என்ன?
உங்களை அடையாளங்காண என்னை வா என்றதேயாம்;
விழுந்ததம்மா எம்தலையில் நேபோம் குண்டு!
அழுதோம்! புரண்டோம், தாங்கமுடியவில்லை!
சித்தி! உனக்குத் தெரியுமா நான் ஓடிய ஓட்டம்
சித்தி! அன்று வரை என் உடம்பு சைக்கிளில் தான்!
மச்சான் கோடீஸ்வரன், செல்வராசா, அண்ணர் நாகேந்திரர்
எச்சாக்கும் கூறாது என்னை ஏற்றிச் சென்றனர்.

களைக்காது 46 நாட்கள் நம்பிக்கையோடு ஓடினோம்!
வீணாகிப் போச்சே எம் முயற்சி! அப் படுபாவிகள் எனக்குத்
துணாக இருந்த உங்களை துகளாகி விட்டனர்.
கிருஷி, பிரணவன், கிருபா, மூவரையும் ஒழித்தனரே — உம்
அரவணைப்பில் இருந்த நான் கையிழந்து நிற்கிறேன்!
அழுதாலும் தொழுதாலும் உமை இனிக் காணமாட்டோம்.
தனியாகப் பள்ளி போகும்போது உம் நினைவு வாட்டுகிறது.
இனியும் அந்தக் கொல்லரக்கர் யாது செய்வாரோ;
நாம் அழுவது உங்களுக்குக் கேட்கிறதா?
நாம் படும் துயரம் தான் தெரிகிறதா?
சித்தி! உங்கள் ஆத்மா எத்தனை துன்புற்றிருக்கும்?
சித்தி! பிரசாந்தியின் நினைவு அமைதியைக் கொடுக்காதே?
இதை நாம் அறிவோம் — கய்வன் அறியான்—
ஆன்ம சாந்தியை நீங்கள் அடைய நாம் எல்லோரும்
ஆனந்தக் கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.
சித்தி! கிருஷி பிரணவா, கிருபா! மீண்டும் நீங்கள்
எம்மிடையே வந்து சேர வேண்டும். நாம்
மீண்டும் ஒன்றாக வேண்டும். இதுவே எமது ஆசை!

அமைதி கொள்ளுங்கள்! ஆறுதல் அடையுங்கள்

ஓம் சாந்தி— சாந்தி- சாந்தி—

— புவனேஸ்

★ ★ ★

# GOVERNING BODY FOR EDUCATIONAL INSTITU-TIONS FOUNDED BY C. M. S, IN CEYLON

Dr. E. S. Thevasagayam, M A., M.Sc., Ph.D
Chairman

119/5A Kynsey Road
Colombo 8.
Sri Lanka.

Mrs. S. Gunawardena, B.A ,M.Sc.Dip.
Ed., Cert. Ed.
Principal, Ladies' College, Colombo
Secretary

Tel: Off. 591980
Res. 686124

20 November 1996

Mr. Navaratnam
51 Fernando Road,
Colombo 6.

Dear Mr. Navaratnam

The Governing Body of CMS Schools at its meeting on 13 November, asked me to convey to you, Krishanthy's sister and other members of the family our deepest sympathies and distress at the tragedy that has befallen on your family. Words cannot express the feelings of sorrow we feel for the loved ones.

I was also asked to send a letter of protest to H.E. The President signed by all members of the Governing Body and send you a copy, which is attached herewith.

Once again with our deepest sympathies

Yours sincerely

Dr. E. S. Thevasagayam
Chairman

# தொழிலை நேசித்த ஒரு கர்மயோகியை இழந்து தவிக்கிறோம்

அன்பு நிறைந்த நல்லாசான், மாணவர்களுக்கு நல்ல வழி காட்டி, பாடசாலைக்கோர் நல்ல நிர்வாகி, குழந்தைகளுக்கு நற்றாய், நல்லயலவர், இங்கிதமான பேச்சு இத்தனையும் ஒன்று திரண்ட ஓர் உருவந்தான் எமது பிரதி அதிபர் திருமதி இராசம்மா குமாரசாமி.

தனது தொழிலை நேசித்த ஒரு கர்மயோகியை இன்று எமது பாடசாலை இழந்து நிற்கின்றது. அன்பான தன்னலமற்ற சேவையினால் சகல ஆசிரியர்களினதும் இதயங்களைக் கவர்ந்தவர். அது மற்றுமன்றி மாணவர்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர் இப்பாடசாலையின் ஒவ்வொருமாணவனையும், மாணவியையும் நன்கு அறிந்திருந்தார். முப்பத்தெட்டு வருட சேவையின் பின், ஓய்வு பெறும் வயதை நெருங்கிக் கொண்டிருந்த திருமதி இராசம்மா குமாரசாமி பாடசாலையில் ஒரு தாயின் ஸ்தானத்தில் வைத்து மதிக்கப்பட்டு வந்தார்.

கலைப்பட்டதாரியான திருமதி இராசம்மா குமாரசாமி ஆங்கிலத்தை மிக விரும்பிப் போதித்து வந்தார். இப்பாடசாலையில் அவர் ஆசிரியராகச் சேர்ந்து உப அதிபராக இருந்த காலகட்டங்களில் பல்வேறுபட்ட ஆசிரியர் குழாத்துடன் கடமையாற்றியது மட்டுமன்றி அவர்களிடம் நல்ல கணிப்பையும் பெற்றிருந்தார்.

அவரது பிரிவுபசார விழாவில் ஒரு பாராட்டுரையை எழுதி, பேசக்காத்திருந்த எமக்கு இரங்கலுரை நிகழ்த்தவும், அஞ்சலிகள் எழுதவும் விட்டு விட்டு அகாலமாக மரணமடைந்தமை எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியது. தாயை, சகோதரியைச் சந்திக்காத எமகாதகர்களின் கைகளில் அவர் அகப்பட்டது துர் அதிஷ்டந்தான்.

ஆயிரமாயிரம் கற்பனைகளோடு வாழ்ந்த அவர் துடிதுடித்து மாண்டார் என்பதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. காணாமல் போனவர் மீண்டும் வருவார் என்று காத்திருந்த — நம்பியிருந்த — எங்களுக்கு பிணமாக மீட்கப்பட்ட செய்தி பழுக்கக் காய்ச்சிய இரும்பை காதில் செலுத்தியது போன்றிருந்தது.

அன்னாரின் இழப்பு இப்பாடசாலைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. பாடசாலை ஓர் நல்ல நிர்வாகியை, நல்லாசிரியை இழந்தது, ஆசிரியர்கள் நல்ல சகாவை இழந்தனர், மாணவர்கள் தாம் நேசித்த நல்லாசிரியையை இழந்தனர். இவ்விழப்பை எப்படித் தாங்குவோம். கால நோய்க்கு அகப்பட்டிருந்தால் சற்று ஆறியிருக்கலாம். அநியாயத்தில் மடிந்ததை எண்ணி மனம் வெதும்புகிறோம். அவரோடு அவர்தம் புதல்வி கிருசாந்தியும், புதல்வன் பிரணவனும் அயலவர் கிருபாமூர்த்தியும் இறந்தது விதியா? மதியா? அல்லது சதியா?

திருமதி இராசம்மா குமாரசாமியினதும், அவரோடு மரணித்த குழந்தைகளினதும், அயலவரினதும் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துக்கத்தில் பங்கு கொண்டு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னார்களின் ஆத்துமாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்.

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்
கைதடி.

ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
ஊழியர்.

# CHUNDIKULI GIRLS' COLLEGE

*Principal:* *Telephone: 22442*
Mrs. T. RAJARATNAM B.Sc., (Madras)
Dip-in-Ed., M. A. in Ed. (Sri Lanka) *JAFFNA.*

*Act. Vice-Principal:* *Sri Lanka*
Mrs. A. Aloysius B. Com.
Dip.in.Ed. (Sri Lanka)

....................19......

Krishanthy, a friend to all and a friend of all

It was a profound shock to all Chundikulites when we got the news of the demise of Krishanthy, her mother- a deputy Principal and her brother reading in our sister school, St. John's College.

Krishanthy, a complete Chundikulite from year three to the Advanced Level, an intelligent and obedient youth with a generous heart, had a cheerful disposition and her company was very enjoyable as she was never at a loss for jokes and kept any crowd in ribtickling laughter as she was a born dramatist.

She was a kind hearted and lovable child.

No words, deeds tears or flowers can say how much Chundikuli Girls' College feels for her, her mother, brother and the neighbour.

Farewell dear Krishanthy, Fare thee well.

"May her soul rest in peace"

**Mrs. T. RAJARATNAM**
PRINCIPAL
Chundikuli Girls College
JAFFNA. SRI LANKA

# யாழ்/பரி. யோவான் கல்லூரி,
# அதிபர் அவர்களின் இரங்கல் செய்தி

பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

( குறள் – அதி – 1 மக்கட்பேறு )

என்பதற்கமைய குமாரசாமி தம்பதிகளின் ஏக புத்திரனான பிரணவன் எமது கல்லூரியில் ஆண்டு 6 இல் இருந்து உயர்தரம் வரை நன்மாணாக்கனாகக் கற்று வந்தார். இவ்வேளை மாணவனின் திடீர் மரணம் உலகையே ஏங்க வைத்தது. குறிப்பாகக் கல்வி உலகம் அவரின் பிரிவால் ஆற்றொணாத் துயரடைந்துள்ளது.

ஈன்ற தாயுடனும், உடன்பிறந்த சகோதரியுடனும் இணைந்து வாழ்விலும், கல்வியிலும் எத்தனையோ இன்பங்களைப் பெற்று வாழ வேண்டிய இளமைப்பருவமே மாணவனின் பருவம். ஆனால், அத்தகைய இளம் பருவத்தில் தன் தாயுடனும், சகோதரியுடனும் இணைந்து எல்லாம் மறந்து இறப்புக்குள்ளாகினானே என எண்ணும் போது எவர் இதயந்தான் கசியாது.

இம்மாணவனின் பிரிவால் துயருறும் அவரது, சகோதரர்களுக்கும், உறவினர்களுக்கும், எமது கல்லூரியின் சார்பாகவும், எனது சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, மாணவனதும், அவர் தாயதும், சகோதரியதும் அயலவரினதும் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து அமைகிறோம்.

எஸ். தனபாலன்
( அதிபர் )

பரி. யோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அமரர் திருமதி இ. குமாரசுவாமி 1996-09-07 சனிக்கிழமை பிற்பகல் தன் மகள் செல்வி கிருஷாந்தி குமாரசாமியைத்தேடி மகன் செல்வன் கு. பிரணவனுடனும் திரு. சி. கிருபாமூர்த்தியுடனும் சென்றவர் மாலையாகியும் வீடு திரும்பவில்லையென்றபொழுதும் அவர்களுக்கு ஏதும் நடந்திராதென்றே எல்லோரும் நம்பி யிருந்தோம். ஆனால் அவர்கள் மறைந்து 45 நாட்களின் பின்பு அவர் களுக்கேற்பட்ட நிலையைக் கேள்வியுற்று அதிர்ச்சியும், சொல் லொணாத் துன்பமுமடைந்தோம்.

கடந்த 38 ஆண்டுகளாக ஆசிரியராக, உபஅதிபராகக் கல்வி யுலகிற் சஞ்சரித்து பரந்த கல்வி அறிவாலும், ஆளுமைப் பண்பாலும் பெற்றோர், சகஆசிரியர், மாணவர் மத்தியில் நிலையான ஓர் இடத் தைப் பிடித்துக் கொண்டவர் திருமதி இ. குமாரசாமி.

சிறுவயதில் தந்தையை இழந்த தன் மழலைகளைத் தந்தை இல்லையென்ற குறையே தெரியாது கண்ணை இமை காப்பதுபோல் காத்து தன் மகளின் மானம் காக்கப் புறப்பட்டுச் சென்றவர். அம்மக ளோடும், மகனோடும், திரு. சி. கிருபாமூர்த்தியோடும் இவ்வுலகை விட்டே மறைந்துவிட்டார்.

அவர் மறைந்தாலும் அவரும் அவரது பிள்ளைகளும் எம்மீது காட்டிய அன்பும், அறிவுரையும் எம்மைவிட்டகலா. அவர்கள் எம் முன் நிழலாக நிற்கின்றனர்.

அமரர்களாகிவிட்ட தன் அன்னையையும், உடன் பிறப்புக்களை யும் பிரிந்து தவிக்கும் செல்வி கு. பிரசாந்திக்கும் குடும்ப உறுப்பினர் களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவர் களது ஆத்மா எல்லாம்வல்ல இறைவன் திருவடி நிழலை அடைந்து சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

நா. சத்தியநாதன்

பிரதேச கல்விப் பணிமனை,
சாவகச்சேரி.

# நீ உதிர்ந்தும் உதிராத உன் நினைவுகள்

நட்பிற்கு இலக்கணமாய், நம்மில் ஒருவனாய், நம்மிடையே இருந்து இன்று நம்மையெல்லாம் நடுவழியில் விட்டுச் சென்றாயே, நண்பா. உன் நினைவுகளை மனம் மறக்கவில்லை. அதை புதுப்பிக்கவே விரும்புகின்றது. அதனால் என்கரம் நாட்குறிப்பு ஏடுகளை என்னை அறியாமலேயே பின்நோக்கி நகர்த்துகின்றது.

''பிரணவன்'' இந்த பெயர் இல்லாத பக்கங்களே இல்லையெனலாம். மாணவர்கள் இணைந்து செய்யும் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் அவன் தன்னை அதில் அர்ப்பணிக்கத் தவறியதில்லை. அதே போன்று தன்னிடம் வரும் ஒவ்வொரு பொறுப்பையும் சிறப்பாக செய்து முடிக்க வேண்டும் என்ற நேரிய நோக்குடையவன். தலைமைத்துவமும், வழிநடத்தலும் இவனிற்கு கிடைத்த ஒரு வரம் என்றே கூறவேண்டும். உதாரணமாக எமது மாணவர் மத்தியில் இயங்கிவந்ததும், அறிவாற்றலும், சிறந்த தலைமைத்துவமும் இருக்கும் ஒருவரால் மட்டும் வழிநடத்திச் செல்லக்கூடியதுமான ஒரு அமைப்பு English Literature Union இதை தானாக முன்வந்து தனது தலைமைத்துவத்தின் கீழ் எடுத்து மற்றவர்கள் வியக்கத்தகு வகையில் சிறப்பாக நடத்தி ஆசிரியர்களின் பாராட்டையும் வென்றவன்.

படிப்பிலும் கூட தனக்கென்று ஒரு நிலையான இடத்தை எப்பொழுதும் வைத்திருந்தவன். ஒவ்வொரு பரீட்சை முடிவிலும் Average-80% குறையாமலே எடுப்பான். பாடசாலையில் நடைபெறும். கல்வி சம்பந்தமான போட்டிகளில் கூட பங்குபற்றி பரிசுகளை தட்டிச்செல்வது அவனது வழக்கமான காரியங்களில் ஒன்று என்றே சொல்லவேண்டும். தான் எதிர்காலத்தில் ஒரு Engineer ஆக வேண்டும் என்னும் நோக்கோடு, அதற்கான அத்திவாரங்களை சிறு வயதில் இருந்தே போட்டு வந்தவன்.

சிரித்த முகத்துடன் காணப்படும் இவன் மற்றவர்களையும் சிரிக்கவைத்துக் கொண்டே இருப்பான். உதவி என்று எதை அவனி டம் கேட்டாலும் தன்னால் இயன்றவரை மனம் கோணாது திருப்தி யாகவே செய்து கொடுக்கும் நல்ல உள்ளம் படைத்தவன்.

உலக வாழ்க்கையில் எமக்கு தேவையான எந்த பொருட்களிலும் நல்லவற்றை இலகுவாகப் பெற்றுவிடலாம். ஆனால், சில சந்தர்ப் பத்தில், எமக்கு குருவாகவும் ஒரு வழிகாட்டியாகவும் இன்ப துன்பங் களில் பங்கெடுக்கும் ஒரு நல்ல நண்பனாகவும் எம்மத்தியில் இருந்து மறைந்துவிட்ட ஒரு இனிய ''பிரணவனை'' இனி என்றும் காணமுடி யாது. இப்படிப்பட்ட அன்பும், பண்பும், அறிவும் நிறைந்த பிரண வனின் இழப்பு எம்மைவிட, எம்முடைய பாடசாலைக்கே ஏற்பட்ட ஒரு பெரிய இழப்பாகத்தான் கருதவேண்டும்.

இறுதி வரை உறுதியாக வாழ்ந்து இளவயதிலேயே இறைவனடி சேர்ந்த எமது ஆத்ம நண்பனுக்காய் கண்ணீர் மல்க அவனது ஆத்ம சாந்திக்காக இறைவனடி பிரார்த்திப்போமாக.

சாந்தி சாந்தி சாந்தி

திருநாவுக்கரசு செந்தில் குமரன்
பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

★

# நீங்காத நினைவுகளுடன்...

அண்மையில் நெஞ்சம் நெகிழும் வகையில் அகால மரணத்தைத் தழுவிக்கொண்ட அமரர் கிருபாமூர்த்தி கைதடி–நாவற்குழி மக்களின் உள்ளங்களிலே உறைந்திடும் வகையிலே எமது சங்கத்திற்கூடாகச் சேவையாற்றியவர். அவருடைய சேவை மனப்பாங்கு, அடுத்தவர்க்கு உதவும் உளப்பாங்கு, கடமையில் கண்ணியம், செயலில் உறுதி என்பன அவரது வாழ்வின் முடிவின் மூலமும் உறுதியாகத் தெரியப்படுத்தப் பட்டிருக்கிறது.

''ஊழையும் உட்பக்கம் காண்பர்—உலைவு இன்றித்
தாழாது உஞற்றுபவர்''

என்று தனது கடமைப்பாட்டோடு உடனடியாகச் செயற்பட்டவர். இருந்தும் அவரது முயற்சி கைகூடவில்லை. அந்நிலையில் அவரது உடல், பொருள், ஆவி அனைத்தும் அர்ப்பணிக்கப்பட்டன. அவரது உள்ளத்தெளிவு, அவருடைய வாழ்வு இன்று எமக்கு ஆறுதல் தந்து நிற்கிறது. மனிதன் உதிப்பதும் பின் மரிப்பதும் நடப்பவைதான். தவிர்க்கப்பட முடியாதவைதான் வாழ்கின்ற வேளையில் தனக்கு மட்டுமல்லாது பிறருக்காகவும் வாழ்கிறவன் மனிதருள் மாணிக்கமாகிறான்.

அமரர் கிருபாமூர்த்தி என்றும் எமது நினைவில் நீங்காது உறைந்துவிட்டார். அவருடன் அகாலமாய் மரித்துவிட்ட ஆசிரியை திருமதி சி. குமாரசாமி அவரது மக்கள் கு. பிரணவன், கு. கிரிஷாந்தி ஆகியோரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம். இவர்களை காப்பாற்ற விரைந்து தன்னுயிரீந்த அமரர் கிருபாமூர்த்தியினது இழப்பால் துயருறும் அவரது மனைவி, உற்றார் உறவினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் அதேவேளை அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர்கள்—பணியாளர்கள்

தென்மராட்சி மே. ப. நோ. கூ. சங்கம்
கைதடி.

# கல்வித் தீபம்

திருமதி பி. கணேசலிங்கம் B.Sc. Dip. in Ed. M.Ed,
இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கல்விக் கோட்டம்,
தென்மராட்சி.

திருமதி இராசம்மா குமாரசாமி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு சொல்லொணா அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் அடைந்தேன். அவரது சகோதரி இராசமணியும், நானும் சமகாலத்தில் பல்கலைக் கழகத்தில் பயின்றமையினால், எமது நட்பு நான்கு தசாப்த காலங்களைக் கடந்து நிற்பதாகும். இந்த நட்பே இராசம்மாவை எனக்கு அறிமுகப்படுத்தியது. திருமதி குமாரசாமி அவர்கள், யா/கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் உப அதிபராக விளங்கிய காரணத்தால், நாங்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்ள வாய்ப்புகள் கிட்டின. பாடசாலையின் வாசலில் காலடி எடுத்து வைத்தவுடன் மென் நகை காட்டி, வரவேற்று உபசரிக்கும் தோற்றம் மனதை விட்டு மறையுமோ.

அடக்கமான சுபாவம், ஆழ்ந்து சிந்தித்துச் செயலாற்றும்திறமை, ஆங்கிலப் புலமை, நட்புடன் அரவணைக்கும் இனிமையான பாங்கு, என்பன அவரது சிரிய ஆளுமைப் பண்பின் கூறுகளாக அமைந்திருந்தன. அழுத்தமான பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்றி பாடசாலைப் பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்றி வந்தமை பாராட்டுக்குரியதாகும். கைதடி வாழ் மக்களுக்கு அறிவொளி ஊட்டும் கல்வித் தீபமாக விளங்கிய அன்னாரின் சேவை மறக்கப் படக் கூடியதல்ல.

துணைவரை இழந்து நின்ற அவர்,குஞ்சுகளை சிறகுக்குள் வைத்துக் காப்பாற்றும் பறவையாக, அன்னம் ஊட்டி அரவணைத்து வளர்த்தார். அவர் மீளாத பயணத்தைத் தன் குஞ்சுகளுடன் மேற்கொண்டமை முன்வினைப்பயனன்றி பிறிதொன்றுமில்லை. தாயை இழந்து தவித்து நிற்கும் பிரசாந்திக்கும், உடன் பிறப்பை இழந்து உயிர் துடிக்க நிற்கும் சகோதர, சகோதரிகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுவோமாக.

திருமதி பி. கணேசலிங்கம்

மீசாலை.

# A Note of Appreciation to Mrs. Rasommah Kumaraswamy

Mr. S. Kanesalingam, B,A., Dip-in-Ed. M.A.
Retd. Cluster Principal,
J/Kaithady Muttukumarasamy M.V.

It was with much sorrow and shock that I heard the news of the tragic and untimely death of Mrs. Rasammah Kumaraswamy, who was the Deputy Principal of J/Kaithady Muttucumarasamy Maha Vidyalayam. It was a great pleasure to have been associated with her, when I was Cluster Principal of the same school.

Born in a respectable family in Kaithady, she was a very talented, cultured and amiable lady, She was an extremely duty conscientious teacher and worked hard for the betterment of the students of Kaithady. Her punctuality was exemplary. She was a great asset to me and helped me in the settlement of the problems that arose in the day to day administration of the school by suggesting acceptable solutions. By her soft speech and charm personality. she endeared herself to everyone who was associated with her. She was instrumental in maintaining discipline among the students and cordiality among the members of the staff and parents.

She knew every student by name and took great pains to encourage each one to perform better in the classroom. She will be remembered with gratitude by the people of Kaithady, for the enormous contributions she made as a teacher, for nearly four decades.

It is very unfortunate that such a talented, cultured, compassionate, duty minded and God-fearing person should leave this world so unexpectedly. Her demise leaves an unbridgeable void in the life of her eldest daughter. I pray for the repose of her and her children's souls and join her daughter and relatives in their pain and torments which they suffer in silence.

**Mr. S. Kanesalingam**

Messalai.

# கண்ணீர்க் காணிக்கை

கண்ணவிழ்ந்து கொட்டும் விழிநீர்கள்
செவிகளில் விழ்ந்த சேதி பொய்யாகுமா?
இதயமே, எப்படித் தாங்கினாய்?
உன் சுவடுகள் பதிந்த பள்ளி மணல்
உந்தன் மென்மை தெரிந்த வகுப்பறை
பரீட்சை மண்டபத்தில் 'வெறுமையாக'
உன்னையே நினைவுறுத்தும் உனது இருப்பிடம்
நீ வருவாய் வருவாய் என்று
அமைதி இன்றி தவிக்கும் இரசாயனவியல் வினாத்தாள்
எம் இனிய தோழியே!!
யாதொரு தீங்கும் நீ நினைக்கவில்லை
யாதொரு பாதகமும் நீ செய்யவில்லை
உன் சேவை கேட்டு நின்றவர்களுக்கு
தயங்காமல் சேவை செய்தாய்;
வகுப்பறையில் கும்மாளமடிக்கையில்
உன் பகிடிகளில் நாம் பரவசமடைவோம்
ஆசையோடு கல்விகற்கும் உன் ஆர்வமும்
இடைநடுவே 'ஜோக்ஸ்' அடித்து
நம்மை எல்லாம் இவ்வுலகையே மறக்கச்
செய்யும் உன் குறும்புகளும்
ஐயகோ!
முடியவில்லை, எம்மால் தாங்க முடியவில்லை
குத்தி தசை பிளந்து
குருதியில் குளிப்பாட்டி
நித்திலத்தில் உன் வாழ்க்கை
நினைத்தவுடன் முடித்ததற்கு
இம் மழலை இழைத்திட்ட
குற்றமென்ன?
தித்திக்கும் செந்தமிழை
தெவிட்டாது கற்றதுதான்
சொல்லிலே, செயலிலே, அன்பிலே
ஆதரிக்கும் பண்பிலே, பாசத்திலே
அனைவரையும் நினைக்க வைக்கும்
நிர்மலங்கள்

நிசப்தமாய் அவனியிலே நித்திரையானதே
இறுதியாண்டு தன்னை இனிதாய் முடிக்க
இருந்த உன்னை – காலன்
இடையினிலேதான் அநியாயமாய் பிரித்தானே
பேனாவின் மை கரைய
இதயத்தின் சுமை குறைய
துக்க கதவுகள் திறந்து கொள்ள
தூக்க கதவுகள் அடைத்துக்கொள்ள
சிதைந்து போன மனத்தின்
சிறு அமைதிக்காக எழுதுகிறோம்
எங்கெல்லாம் மானுடம் காயப்படுகிறதோ
அங்கெல்லாம் பூக்கும்
சகோதர சோகங்களின்
சர்வதேசியப் பூக்களாகிய
கண்ணீர்ப் பூக்களை எம்
அன்புத் தோழிக்கு
காணிக்கையாக்குகிறோம்.

உயர்தர வகுப்பு மாணவிகள்
(ஆண்டு 96)
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி கிருஷாந்தி குமாரசுவாமி

**தாயார், சகோதரர், அயலவர்**

அக்கா எங்கு சென்றீர்? கண்களில் கண்ணீரும்
நெஞ்சில் உதிரமும் சொட்ட ஏங்கி நிற்கிறோம்

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மாணவிகள் O/L 96
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

# அன்றுதான் இனி என்று வரும் ?

தன்னை உருக்கி தரணியில் தன் பிள்ளைகளை பண்புடன்
கண்ணைப் போல் வளர்த்தெடுத்தவர் அன்புடன்,
என்றும் என் பிள்ளை நீயடா என்று சொன்னீர் கதையாய்
இன்றும் என் காதில் ஒலிக்குதம்மா அது கண்ணீர் விதையாய்.

பேய் என்று நான் வெருட்டி விட்ட அன்றும்
டேய் அண்ணா சண்டை பிடிப்பம் வாறியா என்றும்,
யாழ்ப்பாணம் போய் யாருடன் கதையளப்பாய் என்றதும்
பாழ்பட்ட நெஞ்சினில் நீ சொல்வதைப்போல் தோன்றுதம்மா.

அண்ணா என்று அன்புடன் பழகவா – இல்லை
ஆசான் என்று மாண்புடன் அழைக்கவா,
என்று எனைக்கேட்ட உனக்கு நான் பதில் சொல்ல வரும்
அன்றுதான் இனி இவ்வுலகினில் என்றுவரும்?

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு''

நீங்கள் செய்த உதவிகளை
என்றும் மறவாத
கண்ணன்

---

# மறவோம் நினை பிரணவா !

சோடியாய்த் திரிந்த சோதி ஒன்று
அணைந்தது
தேடியே கிடைத்திராத தீபமொன்று
அணைந்தது
பாடியே பழகிட்ட பாங்கனே பிரணவா!
ஓடியே போனதன் உண்மை என்ன?
அரக்கரா அழிவு செய்தார் — அன்றியே
இரக்கமேயின்றிய மறலியா வலை விரித்தான்!
பார்க்கவே போனாயே பிரணவா
படுகுழி கிடந்தாயே, மறப்பமா – உந்தன்
வதனம், விறல்மிகு ஆற்றல், கல்வித்திறமை மேலும்...
பையவே அன்னையுடன் பைங்கிளியும் மூர்த்தியும்
சொல்லியே சிதறிட சூளா உரைத்தனர்
பள்ளியே பதறிட பாரெல்லாம் கதறிட
துள்ளியே குமுறித் திரண்டாலும்
இம்மியும் மாறாது இனிமேலும் நடவாது
சொல்லிய பொழுதும் சுடரே!
நினை மறவோம்.

நண்பர்கள்
LVI B
யாழ். பரி. யோவான் கல்லூரி

# *The Fading Away of a Sweet Flower and its Buds*

It is with a heavy heart that we write this tribute to the memory of a great and good lady – Mrs Rasammah Kumaraswamy whose relationship we had enjoyed over thirty years. The tragic manner in which she died with her two beloved children Miss. Krishanthi Kumaraswamy Master Pranavan Kumaraswamyand a neighbour and friend Mr. Kirubamoorthy, cannot be describad in words·

They hail from a very respectable and orthodox Hindu family, brought up in a deeply religious environment at Kaithady Her parents were quite affluent and many af her family members held post of Academic distinctions Mrs Kumaraswamy was an ideal mother and we know how she loved her children and the affectionate way she brought them up as she was very unfortunate in losing her beloved husband after nine years of married life. She was both father and mother to her three children. We who had lived with them when we were displaced from Nallur for 5 months were able of observe the tremendous attachment she displayed to her children and how she catered to the individual likes and dislikes of her children, without losing her patience. The disciplined manner in which the children carried thenselves bear testimony to her matenal care which was unique, and par excellence.

The tragic, gruesome and brutal manner in which Mrs. Kumaraswamy her youngest daughter Miss. K. Krisanthy and her only son Master K Pranawan there friend Mr. Kirubamoorthy were killed cannot be pardoned by any human civilised person – knowing these children and having moved with them intimately one wonders why God was very unkind to them probably because he loved them He wanted to take them young but certainly not the way they were taken. Miss. K. Krishanthy has a brilliant academic record at Chundikuli Girls College but for this gruesome incident she would have entered the univercity and would have been a very useful citizen of this country.

Young Pranavan - a six footer with a very fine physical build would have turned to be an outstandsng citizen. The respect to elders the schopastic performance the religious background in which they were brought up their mannerism and how they carried themselves in their day to day life impressed us verey much and we can never forget their hospitalily, sincerity and their kindness.

MRs. Kumaraswamy was a teacher parexcellence, Vice Principal of J/Muthukumaraswamy Maha Vidiyalayam. The heights that were achieved by her were the results of her own endeavour, her own capacity for work. Being a born educationist, not just a teacher she turned out generations and generations of students as wise citizens useful themselves as in the world. She taught English, but the area covered by a teacher is not limited to the text books alone. It is all life, itself. A fascinating task of education today is to save the heart from the bloody head, and the head from the bleeding heart: The Guru cuts off the excesses of the head and heart and restores the happy union of the two and thereby man's divine and humane identity. One is reminded of Tagore's words: "A lamp cannot light anothor lamp unless it continues to burn its own flame". Mrs. Kumaraswamy is a good example of this.

A great saying " Learn everything thoroughly, after learning all that to be learnt live your life accordingly" of Valluvar - correctly depicts the life of Mrs. Kumaraswamy, "He who imparts knowledge of words to you is akin to God himself. This saying of Auvayar will reverberate in our memories when ever we think of Mrs. Kumaraswamy.

To the members of the bereaved family specially to Miss Prashanthy Kumaraswamy — we extend our deepest sympathies and pray to the Almighty to sustain them in this, their darkest hour. May their soul rest in peace.

Om Shanthi, Shanthi, Shanthi!

**Mr. C. Tyagarajah**
(Retd. Director of Physical Education,
University of Jaffna)
&
**Mrs. Y. Tyagarajah**
(Retired Principal of
J/Manipay Ladies College)

# Message from the Principal

It is with a deep sense of shock and profound grief that we learnt of the passing away of our dear student Krishanthy Kumaraswamy together with her mother Mrs. Rasammah Kumaraswamy and her only brother Piranavan.

Though the three D's: disaster, disappearance and death have become a natural phenomena of the modern world, to Chundikuli Girls' College the tragedy that befell on Krishanthy was a terrible blow. The hopes and dreams of a bright and promising student of our Alma mater have been shattered. It is with a deep sense of sorrow and grief that Chundikuli mourns the irrational, inhuman and brutal murder of Krishanthy. Chundikuli has lost a simple, obliging, studious and a duty conscious student, her teachers have lost an obedient pnpil and her colleagues have lost a faithful friend. In short the whole of Chundikuli mourns the untimely death of Krishanthy. Only time can ease the pain caused in the hearts by losing Krishanthy the way we did.

May her soul together with her mother and brother rest in peace.

**Mrs. L. P. Jayaveerasingam**
Principal (Emeritus)
Chundikuli Girls College
Jaffna.

# சகலகலா வல்லுனன்

எடுப்பான தோற்றம், மிடுக்கான பார்வை, முகத்திலே தவழும் புன்னகை, எதையும் தாங்கும் இதயம், எவரையும் கவரும் உள்ளம், ஆபத்தில் கைகொடுக்கும் நண்பன் இவையனைத்தையும் உள்ளடக்கிய உன்னதச் செல்வனே பிரணவன்.

யாழ்ப்பாணப் பாடசாலையில் கல்வி கற்கத் தொடங்கிய பின்னரே எமக்கு பிரணவன் நண்பனானான். அவன் சின்ன வயதினிலே சிங்கார நடையுடன் எம்முடன் வருவது இப்போதும் எம் முன் சாட்சியளிக்கின்றது. படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி, பிற துறைகளிலும் சரி, அவன் ஒரு சகலகலா வல்லுனன் என்றே சொல்ல வேண்டும். விளையாட்டில் வெற்றியைக் கண்டு சந்தோஷித்தவனும் அல்லன். தோல்வியைக் கண்டு சளைத்தவனுமல்லன். எமது நண்பர்களில் பிரணவனின் மேல் அளவற்ற அன்பும் நல்லபிப்பிராயமும் காணப்பட்டது. பிரணவனின் அயராத முயற்சியும் தன்னம்பிக்கையும் அவனது முன்னேற்றங்களிற்கு காரணம் எனலாம். பிரணவன் தான் மட்டுமன்றி எம்மையும் உற்சாகப்படுத்தும் உன்னதவீரன். அவன் ஒன்றை நினைத்தால் அதைச் செய்தே தீருவான். நாம் ஆச்சரியப்பட்டால் ''இதுதான் பிரணவத்தின் பொருள்'' என்பான்.

இவன் பாடசாலையில் ஒழுக்கமானவன், மைதானத்தில் சிறந்த விளையாட்டு வீரன், சமூக சேவையில் சிறந்த தொண்டன், கோயிலுக்குச் சென்றால் சிறந்த பக்தன், கல்வியிலும் கலையிலும் சிறந்த விற்பனன், தனது நண்பர்களை நண்பனாகவும், ஆசிரியரை ஆசிரியராகவும், பெரியோரைப் பெரியோராகவும் மதித்து நடக்கும் உத்தமன். இவனிற்கு எதிரியே கிடையாது. சண்டை என்றால் சங்கடம் என்பான்.

பொதுச் சேவை என்றால் அவனுக்கு அதில் அலாதிப்பிரியம். கைதடி மேற்கு சனசமூக நிலையக் கொண்டாட்டங்களில் அல்லது சிரமதானங்களில் அல்லது பொதுச் சேவை என்றால் அங்கே நிற்

பது பிரணவன்தான். இம்முறை இணுங்கித் தோட்டக்கந்தசுவாமி கோயிலின் தேர்த்திருவிழாவிற்காக கைதடி மேற்கு சனசமூக நிலைய தண்ணீர்ப் பந்தலில் அயராது பாடுபட்டவன் பிரணவன்.

பிரணவன் கல்வியிலே காட்டிய ஊக்கமும் நாட்டமும் எம்மக்களுக்கு ஒரு மகாவிருட்சமாகும் என பலர் எதிர்பார்த்தனர். அவனிற்கு கல்வி என்றால் கரும்பு. தனது சகோதரியர்களிற்கும் தாய்க்கும் தான் படித்தே உழைக்க வேண்டும் என்ற அவா அவனிடம் காணப்பட்டது. இது அவனிற்கு ஒரு பொறுப்பு என அவன் கருதுவதில்லை. ''இதெல்லாம் சின்ன விஷயம் என்பான். இதிலிருந்து பிரணவனின் விடா முயற்சியும் தன்னம்பிக்கையும் எமக்கு தெளிவாகப் புரியவேண்டும். இவ்வாறு வளர்ந்த பிரணவன் தனது தாய்ப்பாசத்தையும் தனது சகோதர பாசத்தையும் தலைமேற் கொண்டு அவர்களையும் அழைத்துச் சென்று விட்டான். இந்த உன்னதச் செல்வனின் பிரிவு எம்மால் தாங்க முடியாது. இச் செல்வன் தான் செல்ல முன்னர் தனது நண்பர்களைத் தேடி வந்துள்ளான். ஆனால் எம்மால் அவனைக் காணமுடியவில்லை. படைத்தற், தொழிலைச் செய்யும் பிரமனால் கூட பிரணவனைப் போன்று நல்ல குழந்தையின் உயிரை இனிப்படைக்க முடியாது என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

பிரணவனினதும் அவனது தாய், சகோதரி ஆகியோரதும் ஆத்மா சாந்தி வேண்டி சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நண்பர்கள்
கைதடி

# நற்பண்பு நிறைந்த நல்லாசான் குடும்பம் இரங்கல் செய்தி

''தோன்றிற் புகழோடு தோன்றுக அஃது இலார்
தோன்றலில் தோன்றாமை நன்று''

எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய புகழுடன் தோன்றி, புகழோடு வாழ்ந்து, புகழோடு மறைந்தனர் 'இராசம்' என அன்புடன் அழைக்கப்படும் அமரர் திருமதி இராசம்மா குமாரசாமி, அன்னாரின் அன்பு மகள் கிருஷாந்தி, அருமை மகன் பிரணவன்.

எனது உடன் பிறவாத் சகோதரி அமரர் இராசம்மா குமாரசாமியுடன் 1960 ஆம் ஆண்டு தொடக்கம் 1964 ஆம் ஆண்டு வரை திருகோணமலையில் உள்ள வெஸ்லி இல்லத்தில் ஒன்றாக இருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அன்பு, அடக்கம், பண்பு, பொறுமை பொறுப்புணர்ச்சி, தன்னலமற்ற சேவை மனப்பாங்கு இவையாவும் ஒருங்கே அமைந்த இராசத்திற்கு நிகர் அவரேதான். அக்காலத்தில் திருமலையில் உள்ள ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் சிறந்த ஆசிரியராகப் பணிபுரிந்தார். தனது கடமையைக் கண்ணும் கருத்துமெனக் கொண்டவர். வெள்ளிக்கிழமைகள் தோறும் திருகோணேஸ்வர ஆலயத்திற்குச் சென்று வணங்குவார். இது அவரின் தெய்வ பக்திக்கு ஒரு சான்றாகும். ஓய்வு நேரங்களில் நாவல்கள், சஞ்சிகைகள், வாசிப்பதில் மிகவும் ஆர்வம் காட்டினார்.

1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து கைதடியில் அமைந்துள்ள இவர்களது இல்லத்தில் ஆறு மாதங்கள் ஒரு தாய் பிள்ளைகள் போன்று வாழ்ந்தோம் தங்க இடமின்றி, உடுத்த உடையுடன் சென்ற எங்களை இரு கரங்களும் நீட்டி இன்முகத்துடன் வரவேற்று, தங்கள் சௌகரியங்களை எல்லாம் தியாகஞ் செய்து, எங்களுக்குச் சகல வசதிகளையும் செய்து தந்தனர். இதனை நாம் எமது வாழ்நாளில் மறக்கவே முடியாது. நாம் என்றும் இப் பண்பு மிக்க குடும்பத்திற்கு நன்றிக் கடனுடையோம்.

தந்தை இல்லாத தனது மூன்று பிள்ளைகளுக்கும், தானே தந்தையும் தாயுமாகத் தம் பிள்ளைகளை, கண்களை இமைகள் காப்பது போலப் பேணி வளர்த்தார். அன்னாரின் பிள்ளைகளின் நல்லொழுக்கம், நற்பண்பு, தெய்வபக்தி என்பன தாயாரின் வழி நடத்தலுக்கு நற்சான்றுகளாகும்.

இக்காலகட்டத்தில் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில் உப அதிபராகக் கடமையாற்றிய போது இடம் பெயர்ந்து அல்லலுறும் மாணவர்கள் கல்வி பயிலுவதற்கு தன்னாலான உதவிகளை மனமுவந்து செய்ததை நாம் நன்கு அறிவோம்.

அமரர் இராசத்தின் இரண்டாவது மகள் கிருஷாந்தியை நாங்கள் செல்லமாக ''சின்ன பபா'' என்றே அழைப்போம். அன்பும் பண்பும் அடக்கமும் கொண்ட இவரின் கதை, பேச்சு, நடத்தை எல்லாமே சின்னப் பிள்ளைகளின் செய்கை போன்றன. இத்தகைய சின்ன பபாவிற்கு இக்கதி ஏற்பட்டதை எங்களால் எண்ணிப்பார்க்கவும் முடியாது.

மகன் பிரவணன் மிகவும் புத்திக் கூர்மையானவர். அன்பும் ஆற்றலும் உள்ளவர், நற்பண்பு, பொறுப்புணர்ச்சி, தெய்வபக்தி கொண்ட ஞானசீலன். மற்றோருக்கு உதவி செய்வதில் முன்னிற்பவர். இயந்திர தொழில் நுட்பத்தில் மிகவும் ஆற்றலும் ஆர்வமும் உடையவர். தனது தாய், சகோதரிக்காக தனது உயிரையே அர்ப்பணித்துள்ளார்.

அமரர் இராசத்தின் மூத்த மகள் பிரசாந்தி, தாய் சகோதரர்கள் இறப்பதற்கு இரண்டு மாதங்கள் முன்னர் மேற்படிப்பிற்காகக் கொழும்பு சென்றுள்ளார். அவர் செல்லும் போது இவர்களைத் தான் இனிமேல் காணமாட்டேன் என்பதைக் கனவிலும் நினைத்திருக்க மாட்டார். இவருக்கு ஆறுதல் கூறுவதற்கு எம்மிடம் வார்த்தைகள் இல்லை. எல்லாம் வல்ல இறைவன் இவரை வழி நடத்தி உயர் நிலைக்குக் கொண்டுவருவார் என்பதே எங்கள் அனைவரினதும் நம்பிக்கையும் பிரார்த்தனையும் ஆகும்.

இறந்தவர்களின் உற்றார் உறவினர்களின் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைவதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

50, கோணாவளை ஒழுங்கை, திருமதி சின்னா பரமநாதன்.
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

# கூ வென்று அழவா ?

காலைச் சூரியன் கிழக்கே உதிக்கையில்,
ஆசையாய் ''சிவா'' என்று அழைப்பாயே!
பள்ளிக்குப் போக ஆயத்தமானதும்
''பிள்ளைகள் கவனம்'' என்று என்னிடம் பொறுப்புத் தருவாய்
''இந்தா பிடி திறப்பை, பத்துமணிக்கு பிள்ளைக்கு
அந்தா அந்தா அந்த மருந்தை மறக்காமல் கொடு'' என்பாய்
பின் அவசர அவசரமாய் பாங்காய்ப் பறந்திடுவாய்
போகையிலேயே ''ஆல்ரெடி நான் லேற்'' என்ற படி
பாதையில் கண்வைத்து பஞ்சாய்ப் பறந்திடுவாயே
நான் என் செய்வேன்? உன்பிள்ளைகளை கவனித்து
பாலும் நேரத்திற்குக் கரைத்து ஊட்டுவேன்.
ஆராரோ ஆரிவரோ நீயாரோ நான் யாரோ என்று
ஊரார் கேட்கவே தாலாட்டி வந்தேன். இன்று,
நீயாரோ பிள்ளைகள் யாரோ என்று ஆகிவிட்டது!
நீங்கள் எல்லோரும் எனைக் கவனிப்பீர்கள் எனவே
நானும் கற்பனைக் கோட்டை கட்டி மகிழ்ந்தேன்.
அந்தோ! ஒரு நொடிப்பொழுதில் கோட்டை இடிந்ததே
அந்தப் பொல்லாத அரக்கர் போட்ட குண்டுகளினால்.
நான் வளர்த்த பிள்ளைகள் என்னைத் தாங்கி நிற்பர்.
யான் செய்த தவமது என்று எண்ணியிருந்தேன்!
பாழும் அரக்கர் கை உங்களை புதம்பார்த்து விட்டதையோ!

'வாங்க சித்தி குளிக்க' என்பாய், துவட்டியதுவாயையும்.
காய வைக்க நீயே எடுத்துச் செல்வாய்! பின்னர்
என் கட்டிலில் சாய்ந்து ஏதோ வாசிப்பாய்!
ஐயோ! என் குஞ்சு பிரணவனே! என் பிள்ளையாரே!
மெய்யே! உன் கரங்களால் என் உடுப்புக்களை அடுக்கிடுவாய்.
சித்திக்கு வருத்தம் மருந்து வேண்டுமென்று எண்ணி
எத்திக்கும் சென்று மருந்து வாங்கி வருவாய்!
உன் சின்னக் கரங்களால் வீட்டைத் தூசு தட்டி,
பின் ஒழுங்காகப் பொருட்களை அடுக்கிவைப்பாய்!
என் வீட்டு வேலையெல்லாம் சிவத்தொண்டுபோலாற்றுவாய்
பின்னர் என்னிடம் இருக்கும் இனிப்புப் பண்டங்களை
இங்கிதமாய் எடுத்துச் சுவைத்துத் தின்பாய்.

ஆனால் இன்றோ,
என்னைக் குளிக்கவாக்க எனது கிருஷி இல்லை!
எனக்குத் துணையாய் வர இரு சரங்களில்லாது
தனி வழியைத் தள்ளாடித் தாண்டிச் செல்கிறேன்.
இனி யார்தான் என்னைக் கவனிப்பாரே!
பிரணவா! பேணிக்குள் இருக்கும் இனிப்புப் பண்டத்திலே
இரவிரவாய் பகல்பகலாய் எறும்பு மொய்க்குதடா!
சீனி திண்ட உன் வாயை சிதைத்தான் வாழ்வானோ!
வீட்டு ஒட்டறை தலையை முட்டிப் படருதையா!
கூட்ட ஆளில்லாது தூசு பறந்து தும்முதையா!
நோயுற்ற என்னை காலன் பதம் பார்த்திருக்கலாம் — ஆனால்
காலனென வந்த கட்டாக் காலி உன்னைப் பதம் பார்த்தான்!
கடவுளே! இது துரோகம்! அவன் வாழவா போறான்?
நீங்கள் போன பின் எனக்கேன் என் மாளிகை?
பூங்காய் இருந்த வீடு பாழடைந்து கிடக்குதையா
செழிப்பாய் இருந்த வளவும் காடாய்ப் போச்சுதையா
எதை எதைத்தான் சொல்லி அழ? சொல்லி முடியாதே!
உரிமைக்கு தேனீர் குடித்துவிட்டு உயிரை நீத்தாயே
எரியுதையா வயிறு நானிடும் ஓலம் உனக்குக் கேட்கிறதா?

அன்ன நடை தோற்க நடை நடந்த கிருபா!
உன்னை நான் அழைத்த போதெல்லாம் குலதெய்வம் போல்
பிந்தாது ஓடி வருவாய். கடவுளே! உனக்குக் கல் நெஞ்சமோ!
ஏழைக்கு அவள் செய்த சேவை உன் கண்பட்டு விட்டதோ?
அன்றிக் கடவுளே! நீ கண்டறியாயோ அவள் சேவை!
உங்கள் கழுத்திற் சுருக்கிலிட்டபோது கடவுள் எங்கே?
எங்கள் செல்வங்களை சீரழிக்கும் போது கடவுளே நீ எங்கே?
கடவுளே! கற்பழித்தோரை நீ தண்டிப்பாயா?
கடவுளே! உயிர் குடித்தோரை நீ கண்டிப்பாயா?
அவர் குடும்பம் வாழுமா? நான் ஏங்குகிறேன்!
என் தங்கையே! கிருஷி! கிருபா! பிரணவா! அமைதியடையுங்கள்.
ஏதோ ஒரு பிறவியில் பழிவாங்கப்படும்! என் உயிர்
என்றோ பிரியும் வரை உங்களை எண்ணி நான்
அன்றாடும் இரத்தக் கண்ணீரால் அஞ்சலி செய்வேன்!
மன்றாடும் தெய்வம் என்னிலைகண்டு உங்களுடன், நான்
ஒன்றாகும் நாள் வரை பிரார்த்திப்பேன்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

— சிவா

## மந்திரம்

ஓம் திரயம்பகம் யஜாமஹே
சுகந்திம் புஷ்டி வர்தனம்
உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷியமாம்ருதாத்.

சுத்த சத்துவகுணம் பொருந்தியவரும், ஆன்ம ஒளியை வளர்ப்பவருமாகிய முக்கண்ணனைத் தியானிப்போமாக.

காம்பிலிருந்து வெள்ளரிப்பழம் தானே விடுபடுவது போல, பிறப்பு இறப்பு என்ற பந்தத்திலிருந்து உமதருளால் விடுபடுவோமாக. பேரின்பப் பாதையிலிருந்து விலகாதிருப்போமாக.

## காயத்ரி மந்திரம்

ஓம்
பூர் புவ ஸ்வா
தத் ஸவித்துர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந ப்ரசோதயாத்

ஓம் மாதா முக்காலம் மூவுலகம் முக்குணம் ஆகியவற்றில் உறைபவளே. எனது புத்தியைக் கூர்மை அடையச்செய்து சூர்யப் பிரகாசம் எல்லா இருளையும் அகற்றுவதுபோல் எனது சகல அறியாமையையும் அகற்றி எனது புத்தியைச் சாந்த சித்த நிர்மலமானதாகப் பிரகாசிக்கச் செய்யும்படி யான் உன்னைத் துதிக்கின்றேன்.

# நன்றி

எமது ஆறாத்துயரில் கூடி நின்று அளப்பரிய ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், ஊரவர்கள் அனைவருக்கும், தேடுதலில் சளையாது ஈடுபட்ட அனைவருக்கும், தக்க தருணத்தில் உதவிக்கரம் நீட்டிய திரு. ஜோசப் பரராஜசிங்கம் (பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு) அவர்கட்கும், பிரபல வழக்கறிஞர்களாகிய திருவாளர்கள் தம்பிமுத்து பூபாலன், குமார் பொன்னம்பலம் (ஜூனியர்) அவர்கட்கும், அஞ்சல் – தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்க்கும், நினைவஞ்சலிக்கூட்டங்கள் ஒழுங்கு செய்த வட மாநில அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும், தகுந்த நடவடிக்கை எடுத்த சகல அதிகாரிகளுக்கும், கிரியைகள் நடாத்த இட வசதி தந்துதவிய திரு. தெட்சணாமூர்த்தி குடும்பத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலை பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

மகள்
சகோதர-சகோதரிகள்
குடும்பத்தினர்

இட்டமுடன் என் தலையில் என்ன படி என்று
எழுதிவிட்ட சிவனும் செத்துவிட்டாரா - முட்டமுட்ட
பாரம் அவனுக்கல்லால்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

Kumaran Press, 201, Dam Street, Colombo - 12.